பக்கங்கள் 13+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 24 திங்கட்கிழமை 08.09.2025 | அதிர்வு 40

# நிமல் லான்சா பிணையில் விடுவிப்பு



முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவைப் பிணையில் விடுவிக்குமாறு நீர்கொழும்பு 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# மலையக அதிகார சபை மீது கை வைக்கவே வேண்டாம்!

## ஜனாதிபதிக்கு மனோ அவசர கடிதம்



“2018 ஆம் வருட 32 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நாம் எமது நல்லாட்சி காலத்தில் போராடி பெற்று உருவாக்கிய, “மலையக அதிகார சபை” என எம்மால் அறியப்படும் “பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை”யை மூடி விட, உங்கள் அரசால் எடுக்கப்படும் முயற்சியை உடனடியாகக் கை விடுங்கள்.”

–இவ்வாறுஜனாதிபதிஅநுரகுமாரதிஸாநாயக்கவுக்கு எழுதியுள்ள அவசர கடிதத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., 03▶



# ரணில் – சஜித் அணிகள் இணைந்து செயற்பட முடிவு

## வஜிர அபேவர்தன தகவல்

ஆரம்பப் பேச்சுகளின் போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய ஐக்கிய தேசியக் கட்சியானது, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து தொடர்ந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுடன் செயற்படுவதற்காகக் குழுவொன்றாகவோ அல்லது அதற்கு நிகரான பொறிமுறையாகவோ இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதே ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாடாக உள்ளது.

பொதுக் காரணிகள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியுடனும் ஏனைய எதிர்க்கட்சிகளுடனும் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் கடந்த வாரங்களில் ஐக்கிய தேசியக் கட்சி பல கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தது. 03▶

# பிரசன்ன ரணவீரவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!



முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரசன்ன ரணவீர, மஹர நீதிவான் ஜனிதா பெரேரா முன்னிலையில் இன்று ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் பிரசன்ன ரணவீரவைக் கைது செய்யுமாறு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர நீதிமன்றத்தில் சரணடையாமல் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்று நீண்ட காலமாகத் தலைமறைவாக இருந்தார்.

பின்னர் அவர் கடந்த மே மாதம் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்துத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தலைமன்னாரில் எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆணின் சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை

**(வாஸ் கூஞ்ஞ)**

தலைமன்னாரில் காட்டுப் பகுதிக்குள் சற்று எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆணின் இன்னும் அடையாளம் காணப்படவில்லை

அந்தச் சடலம் அடையாளம் காண்பதற்காக மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார், கட்டுக்காரன் குடியிருப்பு கிராம அலுவலகர் பிரிவில் பூலார் குடியிருப்பு காட்டுப் பகுதியில் கடந்த மாதம் 19ஆம் திகதி ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சடலம் இன்னும் அடையாளம் காணப்படாத நிலையில் மன்னார் பொது



வைத்திசாலையின் பிரேத அறையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

சடலம் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் அல்லது விவரத்தை அறிய விரும்புவர்கள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் வேண்டப்பட்டுள்ளனர்.

இது வரையில் இந்தச் சடலத்தைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்காத நிலையில் இதற்குரிய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக அறியத் தரவும் என மன்னார் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார்.

# தேயிலை பறித்துக்கொண்டிருந்த ஆண் தொழிலாளி சடலமாக மீட்பு!



**(பி.கேதீஸ்)**

தலவாக்கலை பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் இயங்கும் நானுஓயா ரதெல்ல வங்கி ஓயா கீழ் பிரிவு தோட்டத்தில் தேயிலை மலையில் தேயிலைக் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த ஆண் தொழிலாளி ஒருவர் தேயிலை மலையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நானுஓயா ரதெல்ல வங்கிஓயா கீழ் பிரிவைச் சேர்ந்த 59 வயதுடைய மூக்கையா சிவமூர்த்தி என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தேயிலை மலையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நானுஓயா பொலிஸார், மேற்படி நபரின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

பிரேத பரிசோதனையின் பின்னர்



சடலம் உறவினர்களிடம் கையளிக்கப் பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைநானுஓயாபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

# வழக்கு விசாரணை முடிவடையும் வரை 'ஹரக் கட்டா'வை தொடர்ந்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கத் தீர்மானம்

## கொழும்பு மேல்நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தெரிவிப்பு



குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து தப்பிச் செல்லத் திட்டமிடுதல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் கும்பலின் தலைவரும் போதைப்பொருள் கடத்தல் காரரான 'ஹரக் கட்டா' என அழைக்கப் படும் நதுன் சிந்தக விக்கிரமரத்ன என்ப வருக்கு எதிராகத்தாக்கல்செய்யப்பட்டுள்ள வழக்கு மீதான விசாரணைகள் முடிவடை யும் வரை அவரைத் தொடர்ந்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கத் தீர்மானித் துள்ளதாக சட்டமா அதிபர் இன்று திங்கட் கிழமை கொழும்பு மேல்நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

'ஹரக் கட்டா'வுக்கு எதிரான வழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க முன்னிலையில் இன்று நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது 'ஹரக் கட்டா' தனிப்பட்ட பாதுகாப்புக்காக சூம் காணொளி அழைப்பு ஊடாக நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி சஜித் பண்டார, பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவுக்கு அமைய வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை "ஹரக் கட்டா"வைப் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கத் தீர்மானித் துள்ளதாகத் தெரிவித்தார்.

ஆனால் 'ஹரக் கட்டா' சார்பில் நீதிமன் றத்தில் ஆஜரான சட்டத்தரணி இந்தக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, 'ஹரக் கட்டா' இரண்டு வருட காலமாகப் பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்தார் எனவும், அவரைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்க இருக்கும் போது மீண்டும் வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கத் தீர்மானித்துள்ளமை தவறாகும் எனவும் தெரிவித்தர்.

இதனைக் கருத்தில் கொண்ட நீதிபதி, இந்த வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்படும் என்று உத்தரவிட்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மலையக அதிகார...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வுக்கு எழுதி அனுப்பியுள்ள கடிதத் தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"நுவரெலியா, கொழும்பு - அவிசா வளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, பதுளை, மொன ராகலை, காலி, மாத்தறை, குருநாகல் ஆகிய மாவட்ட பெருந்தோட்டப் பிராந் தியங்களில் வாழும் மலையகத் தமிழ் மக்கள் சமூக, பொருளாதார, கலாசார வளர்ச்சிகளில் வளர்ச்சி குன்றிய பிரிவி னர் என்பதைப் புள்ளி விவரங்கள காட்டுகின்றன.

இது 200 வருட சாபம். இதற்குக் காரணம், இந்தச் சமூகம் இந்த நாட்டின் தேசிய வரம்புக்குள் கொண்டு வரப்படாமல் இன ரீதியாக ஒதுக்கி வைக்கப்பட்டமை ஆகும். இதற்குக் காரணம், இவர்கள் அந்நியர்கள், இவர்கள் தமிழர்கள், இவர்களுக்கு காணி வழங்கக் கூடாது, வீடு வழங்கக் கூடாது, தேசிய கல்வி கட்டமைப்பு கள் கொண்டு வரக் கூடாது, தேசிய சுகா தார கட்டமைப்புகள் கொண்டு வரக் கூடாது, பிரஜாவுரிமை வழங்கக் கூடாது என எம் மீது காட்டப்பட்ட, காட்டப்படும் இனவாதம்தான்.

200 வருட ஒடுக்கு முறையில் இருந்து மெல்ல, மெல்ல மீண்டு வரும் இந்தச் சமூகத்தின், கல்வி தரும் பாடசாலைகள், 1976 ஆம் ஆண்டிலேயே தேசிய கல்விக் கட்டமைப்புக்குள் கொண்டு வரப்பட்டன.

கடைசி தொகுதி குடியுரிமையும் 2003ஆம் ஆண்டிலேயே வழங்கப்பட்டு முழுமை அடைந்தது. ஆகவே, தேசிய வளர்ச்சிப் பாதையில் நாம் தாமதமா கவே நடக்க ஆரம்பித்தோம். இதனால், இந்தச் சமூகம், பின்தங்கிய சமூகமாக இன்றும் இருக்கின்றது.

இந்த இன ஒதுக்கல், கொள்கையை இந்த நாட்டில் அனைத்து பெரும்பான மைக் கட்சிகளும் முன்னெடுத்தன. இந்தச் சூழலில், இதைக் கணக்கில் எடுத்தே 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்த அன் றைய நல்லாட்சி அரசில், தமிழ் முற் போக்குக் கூட்டணியினராகிய நாம் பல்வேறு நலத் திட்டங்களை முன்னெடுத் தோம். அதுவரை மறுக்கப்பட்டு வந்த அல்லது உதாசீனம் செய்யப்பட்டு வந்த, காணி உரிமை, வீட்டு உரிமை, கல்வி உரிமை, சுகாதார உரிமை ஆகியவற் றைப் பெற்று எடுக்கும் பெரும் பணியை நாம் ஆரம்பித்தோம்.

இவற்றை வெறும் ஒரு துறை சார்ந்த அமைச்சால் மட்டும் செய்ய முடியாது. அமைச்சுகளுக்கு மேலாக, பல்வேறு துறை சார்ந்த அமைச்சுகளின் பணிகள் கூட்டி இணைக்க பட வேண்டும். இந்தப் பிரதான தேவை பின் புலத்தில், மலையக மக்களின் விசேட குறைதீர் கொள்கை தேவை அடிப்படையில் உருவாக்கப்பட்ட நிறுவனமே, மலையக அதிகார சபை ஆகும்.

நீங்கள் இன்று இதை, ஓர் அமைச்சின் அங்கமாக மாற்ற முயல்கின்றீர்கள். அமைச்சு என்பதும் அதன் நடவடிக்கை களும், நாட்டின் ஜனாதிபதியால் தீர் மானிக்கப்படுகின்றன. நாளை குறிப்பிட்ட அமைச்சு இல்லாமல் போகுமானால், அந்த அமைச்சின் அங்கமும் காணா மல்போய் விடும். ஆனால், அமைச்ச ரவையில் தீர்மானிக்கப்பட்டு, நாடாளு மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு, சட்டம் மூலமாக உருவாக்கப்பட்ட திணைக் களங்கள், அதிகார சபைகள், என்பன அமைச்சுகள், அரசுகள் மாறுகின்ற காரணத்தால், மாறி விடாது. காணா மல்போய் விடாது. இந்த அடிப்படை உண்மையை நீங்கள் புரிந்து கொண்டு, இந்த முயற்சியை நிறுத்த வேண்டும்.

ஜனாதிபதி அவர்களே, நீங்கள் ஆட்சி யைப் பொறுப்பேற்று இம்மாதத்துடன் ஒரு வருடம் நிறைவு பெறுகின்றது. வாழ்த் துக்கள். மலையக மக்களுக்கு நிறைய வாக்குறுதிகளை வழங்கியுள்ளீர்கள். ஆனால், இந்த ஒரு வருடத்தில் சொல்லிக் காட்ட, எடுத்துக் காட்ட, மலையகப் பிராந் தியத்துக்கு உங்கள் அரசு காத்திரமாக எது வும் செய்து விட வில்லை. ஆனாலும், நாம் பொறுமையாகக் காத்திருக்கின்றோம்.

நீங்கள் எதுவும் செய்யவில்லை என்பதை விட, இன்று, இருப்பதையும் பிடுங்கி எடுக்க முயல்கின்றீர்கள். அதை யும் நாம் பொறுமையாக ஏற்றுக் கொண்டு இருக்க முடியாது என்பதை உங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

நீங்கள் செய்ய முயலும் இந்தக் காரியத்தின் பாரதூரத் தன்மையைத் தெரிந்து கொண்டா, அல்லது தெரியா மலா, நீங்கள் செய்கின்றீர்கள் என எனக்கு விளங்கவில்லை. எதுவாக இருந் தாலும், 2018 ஆம் வருட 32 ஆம் இலக் கச் சட்டத்தின் மூலம் நாம் எமது ஆட்சிக் காலத்தில் போராடி பெற்று உருவாக்கிய, "மலையக அதிகார சபை" என எம்மால் அறியப்படும் "பெருந்தோட்டப் பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை"யை மூடி விட, உங்கள் அரசால் எடுக்கப்படும் முயற்சியை உடனடியாகக் கைவிடுங்கள் எனக் கோருகின்றேன்."

– என்றுள்ளது.

### நிமல் லான்சா...

மேல் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ள நிமல் லான்சா இன்று நீர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நிமல் லான்சாவை 2 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தாக்குதல் நடத்துதல் மற்றும் ஆயுதங்களைப் பயன்படுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நிமல் லான்சா நீர்கொழும்பு, கொச்சிக் கடை பொலிஸ் நிலையத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதி சரணடைந்ததை யடுத்து விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த நிலையில் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

### ரணில்-சஜித்...

அந்தக் கலந்துரையாடல்களில் எட்டப் பட்ட இணக்கப்பாட்டுக்கமைய முன்வைக் கப்பட்ட காரணிகளைத் தொடர்ந்தும் நடை முறைப்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது என்று அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அதற்கமைய ஐக்கிய மக்கள் சக்தி யுடன் வெளிப்படையாக இணைந்து செயற்படுவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்று வஜிர அபேவர்தன மேலும் கூறினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## செய்வாரா பிரதமர்?

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அறுபதாவது கூட்டத் தொடர் இன்று ஆரம்பிக்கின்றது. இன்று, முதல் நாளிலேயே இலங்கை தொடர்பான தமது அவதானிப்பு அறிக்கையை மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைக் கிறார்.

அதேசமயம் இலங்கையில் தமிழர்க ளுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற் றங்கள், கொடூரங்கள், மீறல்கள் தொடர் பில் உரிய நடவடிக்கை எதுவும் எடுக் கப்படவில்லை என்பது தொடர்பான சர்வதேச அழுத்தம் கொழும்பை இறுக்கத் தொடங்கி இருக்கையில் சில உண்மை-களை நாட்டின் பிரதமர் இப் போது ஒப்புக்கொண்டிருக்கிறார்.

“உறுதிமொழிகள் நிறைவேற்றப்படா மையினால்தான் இலங்கை மீது ஜெனி வாக் குற்றச்சாட்டுக்களும் நெருக்கடிக ளும் வலுப்பெற்றுள்ளன. கடந்த ஆட்சியாளர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குச் சென்று, வெறும் அறிக்கைகளைச் சமர்ப்பித்து வந்துள்ளார்களே தவிர, அங்கு வழங்கும் உறுதிமொழிகளை உள்நாட்டில் நிறை வேற்றுவதில் ஆர்வம் செலுத்தவில்லை.

“ஜெனிவாவில் மனித உரிமைகள் அமர்வுகள் நடக்கும் போது இலங் கையில் இருந்து செல்லும் தரப்பு ஜெனிவா மனித உரிமைகள் விடயத் தில் வழங்கிய உறுதிமொழிகளை நிறை வேற்றுவது, கொள்கை ரீதியாகச் செயற்படுவது என்பன தொடர்பில் எமது அரசு ஏற்கனவே தீர்மானங்களை எடுத்துள்ளது.

மனித உரிமைகள் சார்ந்த குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் ஆதாரங்கள் இருப்பின் முறைப்பாடு செய்யலாம். சுயாதீனமான விசாரணைகள் முன்னெ டுக்கப்படும். ஆகவே, யாரையும் பாது காப்பதற்காக எமது அரசு கடமைப் பட்டில்லை.

“தேசிய மக்கள் சக்தி அரசின் கீழ் அனைத்து விசாரணைகளும் முன்னெ டுக்கப்படும். இதுவே எமது நிலைப் பாடாகும். ஆனால், இதுவரை காலமும் அந்த விசாரணைகள் இடம்பெறவில்லை என்பது வேறு ஒரு விடயமாகும். பக் கச்சார்பின்றி நேர்மையாக அரசால் செயற்பட முடியும் என்பதனையும், எந்தவொரு விசாரணையையும் முன் னெடுக்க முடியும் என்பதையும் வெளிப் படுத்தியுள்ளோம். இந்த விசாரணை களுக்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளைத் தேவைக்கு ஏற்ப சர்வதேசத்திடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.”

- இப்படி எல்லாம் தங்களைப் பெரும் நீதிவான்கள் போல - நீதியை நிலை நாட்டும் நீதி தேவதைகள் போல - அவர் முழங்கியிருக்கிறார்.

ஜெனிவா விவகாரத்தைப் பொறுத்த வரை முன்னைய அரசுகளின் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கவில்லை, ஆனால் நாங்கள் அப்படி அல்லர் என்பது தேசிய மக்கள் சக்தி அரசின் பிரதமரு டைய பிரகடனமாக இருக்கின்றது.

இப்போதாவது - இந்தக் கூற்றிலாவது - சிங்களப் பேரினவாத அரசு உண்மையாக இருக்குமா என்பதுதான் கேள்வி.

முறைப்பாடுகளை - குற்றச்சாட்டுகளை - நியாயமாக, நீதியாக விசாரித்து, உண்மைகளை கண்டறியும் எண்ணம் சிங்களத்து ஆட்சி பீடத்துக்கு இருக்கு மானால், முதலில் யாழ்ப்பாணத்தில் இராணுவக் கொடூரம் அரங்கேறிய விடயத்தில் உண்மையை வெளிப்படுத் தும் சாட்சியாக மாற விரும்பி, சிறை யில் இருந்தபடி துடித்துக் கொண்டி ருக்கும் - மாணவி கிருஷாந்தி குமார சாமி பாலியல் வல்லுறவு படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப் பட்ட கைதியான - முன்னாள் இராணு வக் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் ஒப்புதல் வாக்குமூலத்தை சட்டரீதியா கச் செவிமடுக்க முன்வர வேண்டும்.

நீதி, நியாயமான விசாரணைகளை நடத்துவோம் என்ற பிரதமரின் கூற்று உண்மையானால் முதலில் மரண தண் டனை கைதிகளின் கூட்டிலிருந்து வெளி வரும் அந்த அவலக் குரலை செவி மடுத்து, அந்த விடயங்களை பதிந்து, சட்டரீதியாக நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்க வேண்டும். அதுவே நீதியான விசாரணை நடக்கும் எனப் பிரதமர் கொடுத்த உறுதிமொழிக்கு முதல் சான் றாக அமையக்கூடும். செய்வாரா பிரத மர்? அவரது அரசு இது விடயத்தில் நேர்மையான நடவடிக்கை எடுக்குமா?

# தரம்-05 புலமைப் பரிசில் முறையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும்!

## கல்வி நிபுணத்துவ ஆர்வலர் முக்தார் தெரிவிப்பு

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

தற்போது நடைமுறையிலுள்ள ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பதிலாக வசதி குறைந்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பணம் வழங்குவதற்காக ஒரு பரீட்சையும் பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்காக இன்னொரு பரீட்சையுமாக இரண்டு பரீட்சைகளை நடத்துவது பற்றி கல்வி அமைச்சு ஆலோசனை நடத்தி நவீன மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரியுள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் செயலாளரும் கல்வி நிபுணத்துவ ஆர்வலருமான ஏ.எல்.எம்.முக்தார் தெரிவிக்கையில்,

ஐந்தாம் தர புலமைப் பரீட்சை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்துக்கும் தற்போதைய காலப் பகுதிக்கும் இடையே பாடசாலைகளில் பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் இந்தப் பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்ட காலப் பகுதியில் கிராமப் பகுதிகளில் சகல வசதிகளையும் கொண்ட பிரபல்ய பாடசாலைகள் இருக்கவில்லை. கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களிலேயே வசதியான பாடசாலைகள் இருந்தன.



இதற்காகவே மேற்படி பரீட்சை இரண்டு நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் ஆட்சியாளர்களால் திட்டமிட்டு நடத்தப்பட்டது. அவ்வாறான நிலை தற்போது எங்கும் இல்லை. அரசு வழங்கும் மாதாந்த புலமைப் பரிசில் உதவு தொகையான 750 ரூபாவை வைத்துக் கொண்டு எதனையும் சாதித்து விடவும் முடியாது.

தற்போதைய நிலையில் ஏழைப் பெற்றோர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகளுக்கு மேலதிக வகுப்புக்களுக்காக பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு வருகின்றனர். இந்த பிள்ளைகள் படித்த பெற்றோர் மற்றும் செல்வந்த பெற்றோரின் பிள்ளைகளோடு பரீட்சையில் போட்டி போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகையால் இதற்காக தனியான தொரு பரீட்சையை நடத்த வேண்டும். இந்த பரீட்சையில் சித்தியடையும் மாணவர் ஒருவருக்கான புலமைப் பரிசில் நிதியை மாதமொன்றுக்கு 3000 ரூபா முதல் 5000 ரூபாவரை அதிகரிக்க வேண்டும்.

இதேபோல் பொருளாதார வசதி கூடிய மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளை வழங்குவதற்கான பரீட்சையை நடத்தித் தகுதியுடைய மாணவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவர்களையும் வசதி கூடிய பணக்கார மாணவர்களையும் ஒரே வகையான பரீட்சைக்கு தோற்ற வைப்பது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. வறுமையும் பணமும் ஒரு மனிதனுக்குள் ஒன்றாக இருக்க முடியாது. இரண்டும் இரு துருவங்களாகும்.

தற்போது வசதி கூடிய மாணவர்களும் தமது கிராம, நகர பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளிலேயே உயர் கல்வியை தொடர விரும்புகின்றனர். பிரபல நகர பாடசாலைகளுக்கு செல்வது விகிதாசார அடிப்படையில் மிகவும் குறைந்துள்ளது.- என்றார்.





### திருவாசக முற்றோதல் செய்து சாதனை படைத்த

# வைத்திய காலாநிதி மகேஸ்வரி நன்னித்தம்பி மட்டுவிலில் வைத்துப் பாராட்டிக் கௌரவிப்பு!

திருவாசக முற்றோதல் செய்து சாதனை படைத்து "கலாம் உலக சாதனை விருது" பெற்ற வைத்திய காலாநிதி மகேஸ்வரி நன்னித்தம்பிக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் சாந்த நாயகி அம்மன் சமேத சிவச்சந்திர மௌலிச சுவாமி (மட்டுவில் கலுவம் சிவன்) ஆலயத்தில் நடைபெற்றது.

திருமதி வசுந்தா கதிர்காமர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா கலந்து கொண்டு கலாம் விருதை வழங்கிவைத்தார்.

திருமதி தர்மினி ரஜீபன் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்க, வைத்திய காலாநிதி மகேஸ்வரி நன்னித்தம்பி பொன்னாடை போர்த்தப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு வாழ்த்துப் பாக்கள் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் மட்டுவில் மத்தி ஜே – 312 கிராம அலுவலர் பா.சுபாஸன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஜீவானந்தன் தருசன், யாழ். மாநகர சபை உறுப்பினர் திருமதி சுகிர்தராஜ் சரஸ்வதி மற்றும் நலன் விரும்பிகள், பொது மக்களும் கலந்து கொண்டனர்.













# மயிலத்தமடு, மாதவனை சட்டவிரோத பயிர்ச் செய்கையாளர் இன முறுகலைத் தோற்றுவிக்கும் வகையில் செயற்படுகின்றனர்

## 15ஆம் திகதி ஆர்ப்பாட்டம் செய்வுள்ளனர் பண்ணையாளர்

(வாலகிருஸ்ணா)



நாட்டில் தற்போது ஒரு சுமுகமாக நிலை இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் மயிலத்தமடு, மாதவனையிலுள்ள அத்துமீறிய சட்டவிரோத பயிர்ச் செய்கையாளர்கள் ஒரு இனமுறுகலைத் தோற்றுவிக்கும் முகமாகவே செயற்படுகின்றனர் என்று மயிலத்தமடு, மாதவனைப் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்று சித்தாண்டியில் போராட்ட இடத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடுசெய்தனர். இதன்போது கருத்து தெரிவித்த பண்ணையாளர்கள்,

மயிலத்தமடு மாதவனை கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியடைகின்றது. ஆனாலும் நாங்கள் இந்த அறவழிப் போராட்டத்தில் அடைந்த நன்மைகள் என்பது குறைவு, தீமைகளே அதிகம். மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்ட மூவாயிரத்து இருபத்தைந்து ஹெக்ரெயர் நிலம் இன்னும் எமக்குத் தருவதற்குத் தீர்மானிக்கப்படவில்லை. அதன் பின்னர் மூவாயிரம் ஏக்கர் தருவதாக ஒத்துக் கொண்ட மகாவலி திணைக்களத்தினர் அதனைப் பதிவு செய்து தரவில்லை என்பதும் எங்களுக்குப் பெரிய ஆதங்கம்.

ஆகவே நாங்கள் முன்னெடுத்து வரும் இந்தப் போராட்டத்தின் இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டு எங்களுடைய போராட்டத்தைத் தற்போதைய அரசுக்கு ஒரு அழுத்தம் கொடுக்கும் விதமான முன்னெடுத்து இந்த அரசினூடாக ஒரு தீர்வைப் பெறுவதற்கு அனைத்துத் தரப்பினரும் முன்வருமாறு கேட்டு நிற்கின்றோம்.

எங்களுடைய வாழ்வாதாரத்துக்காகவே நாங்கள் கால்நடைகளை வளர்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இதன் மூலம் நாங்கள் மாத்திரம் நன்மை அடைவதில்லை. அரசுக்கும் இதனால் வருமானம் வந்து கொண்டுதான் இருக்கின்றது. ஆகவே எங்களுடைய கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையை இந்தப் புதிய அரசாவது பெற்று தருமா என்று கேட்கின்றோம்.

மகாவலி ஊடாக ஒரு சில வேலைகள் முன்னெடுக்கப்பட்டும் அவை நிரந்தரமற்றவையாகவே இருக்கின்றன. எங்களுக்கு நிரந்தரமாக இந்த மேய்ச்சல் தரையைப் பதிவு செய்து தந்தால் இந்த அறவழிப் போராட்டத்தைக் கைவிட்டு எங்கள் வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியும். இன்று 697 நாள்களாகியும் இன்னும் ஒரு சாதகமான முடிவும் கிடைக்காத காரணத்தால் தொடர்ந்தும் நாங்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். எனவே இதனை அரசு தீர்த்துத் தரவேண்டும்.

மகாவலி அதிகார சபையிடம் நாங்கள் கேட்ட போது, நாங்கள் அனைத்தையும் மேலிடத்துக்கு அனுப்பியுள்ளோம். அரசே இதற்கான முடிவைச் சொல்ல வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

எனவே எங்களின் இந்தப் போராட்டம் இரண்டு வருட பூர்த்தியை அடைவதற்கு முன்னர் ஜனாதிபதி எங்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தர வேண்டும்.

இந்தப் போராட்டத்துக்காக எங்களுக்கு அனுசரணை செய்த பொது அமைப்புகள், சிவில் அமைப்புகள், கிழக்குப் பல்கலைக்கழக மற்றும் யாழ்ப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியங்கள், பொதுத் தொண்டர் நிறுவனங்களின் செயற்பாட்டாளர்கள்,ஆலயங்கள்,காணாமல்ஆக்கப் பட்ட உறவுகளது அமைப்புகள், அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எங்களுடைய மதகுருமார்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தின் இரண்டு வருட பூர்த்தி ஆர்ப்பாட்டத்திலும் உங்களது ஆதரவுகளைத் தருமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்களுடைய இந்த போராட்டம் இரவு பகலாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையிலும் கூட தெரியப் படுத்தியுள்ளார்கள். நாங்கள் இந்த அரசிடம் நாங்கள் கேட்டுக் கொள்வது இந்த மேய்ச்சல் தரையைப் பெற்று தந்தால் நாங்கள் நிம்மதியாக கால்நடைகளை வளர்த்து அரசுக்கு முதலீடுகளைப் பெற்று கொடுப்பதற்கும் நாங்கள் கடமைப் பட்டுள்ளோம். எனவே ஜனாதிபதி அவர்கள் இந்த மேய்ச்சல் தரையைப் பதிவு செய்து தருவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

தற்போது அரசால் காப்புறுதித் திட்டங்கள் வந்திருக்கின்றன. ஆனால், எங்களுக்கு இன்னும் எதுவும் வந்து சேரவில்லை. கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தால் எங்களுக்கு ஏதும் உதவிகள் வந்து நாங்கள் அதனைச் சென்று கேட்டவுடன் எங்களிடம் மேய்ச்சல் தரை உறுதி கேட்கின்றார்கள். அவர்கள் எங்களிடம் உறுதி கேட்டால் உறுதிக்கு நாங்கள் எங்கே போவது? எனவே எங்கள் பண்ணையாளர்களுக்கான உதவித் திட்டங்களை அவர்களுக்கு வழங்குவதற்கும் ஜனாதிபதி உரிய அதிகாரிகளை வலியுறுத்த வேண்டும் என்று நாங்கள் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

கடந்த மாதமும் எமது பண்ணையாளர்களுக்கு ஆடு கோழி மாடு வந்து இருப்பதாக வந்திருப்பதாக கூறினார்கள். சென்று கேட்ட போது உறுதி கேட்டார்கள். பண்ணையாளர்களைக் கருத்தில் கொண்டு இந்த உதவியைச் செய்யுமாறு கேட்டிருந்தோம். அதற்கு அப்படி செய்வதற்கு சட்டம் இல்லை என்று கூறிவிட்டார்கள். எங்களுக்கென மேய்ச்சல் தரையைப் பதிவு செய்து தந்தால் அதனை வைத்து எங்களுக்காக வருகின்ற அந்த உதவிகளை நாங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் இப்போது அவர்கள் எங்களுக்கு தருவதாக இல்லை. எங்களையும் எங்களுடைய பண்ணையாளர்களையும் புறக்கணித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இனி பெரும் போகம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. அனைவருமே மயிலத்தமடு, மாதவனைக்கு எமது மாடுகளை கொண்டு போக சொல்வார்கள். அங்கு எங்களுக்கு போதிய இடவசதிகளும் இல்லை. ஏனெனில் எங்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அயல் மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் விவசாய நடைவடிக்கைகளை முன்னெடுக்கன்றார்கள். அவர்கள் எங்களுடைய மாடுகளுக்கு சுருக்கு வைப்பது, அவைகளைக் கொல்வது, பண்ணையாளர்களுக்கு அடிப்பது என பிரச்சினைகள் நடக்கின்றன.

நாட்டில் தற்போது ஒரு சுமுகமாக நிலை இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் மயிலத்தமடு மாதவனையிலுள்ள அத்துமீறிய சட்டவிரோத பயிர்ச் செய்கையாளர்கள் இனமுறுகலைத் தோற்றுவிக்கும் முகமாகவே செயற்படுகின்றனர்.

எனவே இவர்களை அங்கிருந்து வெளியேற்றி தமிழ், சிங்கள, முஸ்லிம் என மூன்று இன பண்ணையாளர்களும் குறித்த பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பை மேற்கொண்டு நாங்கள் வாழ்வதற்கு வழி செய்து தருமாறும் ஜனாதிபதி யிளிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த சட்ட விரோத பயிர்ச்செய்கையாளர்கள் காடுகளை அழிப்பதும், இடம் பிடிப்பதுமான செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகின்றனர். இது தொடர்பில் நாங்கள் மகாவலி அதிகார சபையிடம் முறையிட்ட போது சட்டவிரோத பயிர்ச் செய்கையாளர்களை வெளியேற்றுவதாகச் சொல்கின்றார்கள். ஆனால், மகாவலி அதிகார சபை செல்லும் போது அவர்கள் வெளியேறி பின் மீண்டும் சட்டவிரோத பயிர்ச்செய்கையிலும், காடழிப்புகளிலும் ஈடுபடுகின்றார்கள். அங்கிருக்கின்ற பொலிஸாரும் கூட அவர்களைக் கண்டுகொள்வதில்லை. ஆனால் எங்களது பண்ணையாளர்கள் மந்தலையாற்றுப் பாலத்தினூடாகச் செல்வதற்கும் விடுவதில்லை. நாங்கள் ஒரு அவசர தேவைக்கு அதனால் செல்லவும் முடியாது. இவ்வாறான நிலையில் எங்களுக்கும் எங்கள் கால்நடைகளுக்கும் பாதுகாப்பற்ற நிலையே தொடர்கின்றது.

எனவே ஜனாதிபதி இந்த சட்டவிரோ பயிர்ச்செய்கையாளர்களை அங்கிருந்து வெளியேற்றி அவர்களால் எங்களுக்கு ஏற்படுத்தப்படும் ஆத்துகளில் இருந்து எங்களதுப் பாதுகாத்து எங்களது வாழ்வாதாரத்துக்கான இந்த மேய்ச்சல் தரையை ஒதுக்கித் தரவேண்டும்.- என்றனர்.



# மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற தீர்த்தத் திருவிழா

(வாலகிருஸ்ணா)

கிழக்கிலங்கையின் சின்னக்கதிர் காமம் என்று அழைக்கப்படும் மட்டக் களப்பு மண்டூர் கந்தசுவாமி ஆலயத் தில் நேற்று (07) தீர்த்தோற்சவம் பல்லா யிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ மூங்கிலாற்று சங்கமத்தில் நடைபெற் றது.

இலங்கையின் சின்னக்கதிர் காமம் எனப்போற்றப்படும் கிழக்கிலங் கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக் களப்பு மண்டூர் கந்தசுவாமி ஆலயத் தின் வருடாந்த திருவிழா கடந்த மாதம் 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இலங்கையின் வரலாற்று பதிகளில் ஒன்றான மண்டூர் கந்தசுவாமி ஆலயம் கந்தபுராணத்து காலத்தில் உருவான ஆலயமாகும்.

முருகப்பெருமானுக்கும் சூர பத்ம னுக்கும் இடையில் உண்டான போரின் போது முருகப்பெருமான் வீசிய வேல் ஆறு கூறுகளாக பிரிந்து சென்று சூரனை வதம் செய்ததாகவும் அவற்றில் ஒருவேல் கதிர்காமத்திலும், ஒரு வேல் மண்டூரிலும் தங்கியதாக கர்ணபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன.

அதேபோன்ற சோழ பரம்பரையில் வந்த சீர்பாததேவியால் கொண்டுவரப்பட்ட வேலை அவருடன் வந்த ஒருவர் எடுத்து வந்து இங்கு ஒழித்துவைத்து அதனை வேடர்கள் கண்டு வழிபட்டதாகவும் கூறப்படுகின்றது.



இருபது தினங்கள் நடைபெற்ற இந்த மஹோற்சவத்தில் தினமும் சுவாமிக்கு விசேட பூஜைகள் நடைபெற்று முருகப் பெருமானின் வெளி வீதி உலா நடை பெற்றது.

பாரம்பரிய பூசைமுறைகளுடன் பாரம் பரியமான முறையிலேயே ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது.

தீர்த்த உற்சவத்தைத் தொடர்ந்து வேல்தாங்கிய பேழை ஊர்வலமாக ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது அங்கு சிறுமிகள் ஆரார்த்தி எடுக்கும் நிகழ்வு நடைபெற்றது.



# வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பண்பாட்டு பெருவிழா நாளை

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையோடு வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு பெருவிழா நாளை செவ்வாய்க் கிழமை (09) பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை சூரிய மஹால் மண்ட பத்தில் இடம் பெறவுள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலாள ரும் பண்பாட்டு பேரவைத் தலை வருமான நடராசா திருலிங்கநாதன் தலை மையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ், யாழ். சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர் சுகுணாலினி விஜயரத்தினம் ஆகியோ ரும் கௌரவ விருந்தினர்களாக மூத்த கலைஞர்களான வே. முத்துசாமி, மு. ஜெகதேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் மாற்றுத்திறனாளிகளுக்குக்கு உதவி!



(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின ரால் மாற்றுத் திறனாளிகளுக்கான காசோலைகள் கொடுப்பனவு உதவித் திட்டம் இன்று (08) ஆரம்பித்து வைக் கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை எல் லைக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு, ஒட்டு சுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 32 மாற்றுத் திறனாளிகளுக்கு மாதம் 5000 ரூபா வீதம் ஆறு மாதங்களுக்கான கொடுப் பனவுக்குக் காசோலை உதவிதிட்டம் இன்று (08) காலை ஆரம்பித்து வைக் கப்பட்டது.

அந்தவகையில் புதுக்குடியிருப்பு பிர தேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 19 பயனாளிகளுக்கு இன்றையதினம் ஒருவருக்கு மூன்று மாதத்துக்கு உரிய காசோலைகள் வீதம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது. ஏனைய மூன்று மாதங்களுக்கு 5000 ரூபா வீதம் வழங்கி வைக்கப்படவுள்ளது. அத்தோடு ஒட்டுசுட் டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஏனைய 13 பயனாளிகளுக் கும் எதிர்வரும் நாள்களில் வழங்கப்பட இருக்கின்றது.

சபை அமைப்பதற்கு முன்னர் புதுக்குடி யிருப்பு பிரதேச சபையின் செயலாளரால் உள்ளூராட்சி மன்ற வரவு செலவுதிட்டத் தில் ஒதுக்கீடு செய்யப்படும்.

விஷேட முன்னனுமதிகள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இதற்கமைவாக வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதி பெறப்பட்டு இன்றையதினம் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கி வைக்கப் பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வேலாயுதம் கரிகாலன் தலை மையில் இடம்பெற்ற குறித்த நிகழ் வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் ச.கிருசாந்தன், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உத்தி யோகத்தர்கள், மாற்றுத் திறனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சிட்னி முருகன் கோவிலில் கலாசார கல்வி மண்டபம்!




(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

சிட்னி முருகன் கோவிலில் கலாச்சார கல்வி மண்டபம் மீள் நிர்மாணம் செய் யப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை சைவத் தமிழ் ஆர்வலர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆஸ்தி ரேலிய, நியூ சவுத் வேல்ஸ் நாடா மன்ற உறுப்பினர்களும் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிட்னி வாழ் தமிழ் மக்களுக்கு ஓர் மைல்கல் நிகழ்வாக முருகன் கோவி லின் கலாச்சார கல்வி மண்டபம் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு அதிகார பூர்வமாக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இந்த கலாச்சார கல்வி மண்டபம் மீள் நிர்மாணம் செய்யப்படுவதற்கு, நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசு நிதியு தவி அளித்துள்ளது. நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஜூலியா ஃபின் எம்.பி, ஆஸ்திரேலிய நாடாளு மன்ற உறுப்பினர் ஆண்ட்ரூ சார்ல்டன், ப்ராஸ்பெக்ட் மாநில உறுப்பினர் ஹக் மெக்டெர்மாட் ஆகியோரின் உறுதியான ஆதரவுக்குச் சிட்னி முருகன் கோவிலின் கலாச்சார கல்வி மண்டபம் நிர்வாகிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.



# அட்டாளைச்சேனையில் பௌர்ணமி நிகழ்வுகள்

(எம். எப்.நவாஸ்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்திய பௌர்ணமி கலை இரவு நிகழ்வு அட்டாளைச்சேனை கடற்கரை விடுத்தியில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ். ஜகுபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கணக்காளர் எம்.எப்.பர்ஹான், தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக் உட்பட கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





## ஐஸ் போதைப் பொருளுடன் நோர்வூட்டில் இருவர் கைது!

(மஸ்கெலியா)

பொகவந்தலாவ பகுதியை சேர்ந்த இருவர் ஐஸ் போதைப் பொருளுடன் நோர்வூட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து தலா 170 மில்லிகிராம் ஐஸ் எனும் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அரச புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலுக்கு அமைய வீதி தடைகளை அமைத்து மேற்கொண்ட சோதனையின் போது ஓட்டோவில் சென்ற சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து தலா 170 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவ சிரிபுர பகுதியில் உள்ள இஸ்லாமிய இளைஞர் ஒருவர் பொகவந்தலாவ செப்பல் டன் பகுதியில் உள்ள தமிழ் இளைஞர் ஒருவர் அடங்கலாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நோர்வூட் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.





## பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் சிரேஷ்ட வைத்தியர் இஸ்ஸடீன் கடமையேற்பு!

(அபு அலா )

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வந்த சிரேஷ்ட வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் பொத்துவில் ஆதார வைத்திய சாலையின் சிரேஷ்ட வைத்தியராகவும், பதில் வைத்திய அத்தியட்சகராகவும் தனது கடமையை (04) பொறுப்பேற்றுக்கொண்டார்.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்த காலங்களில் “வளமான சமூகத்தை உருவாக்கல்” எனும் தொனிப் பொருளில் அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், திராய்க்கேணி, ஆலிம் நகர், ஆலங்குளம், சம்பு நகர், தீகவாபி போன்ற பிரதேசங்களில் வாழும் மக்களின் காலடிக்குச் சென்று பல்வேறுபட்ட விழிப்புணர்வு செயற்றிட்டங்களையும் சிறுவர்களுக்கான மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து உணவு வழங்கள் முறைமைகள் தொடர்பாகவும், தாய் சேய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளையும் முன்னெடுத்துச் சென்றவர்.

பொத்திவில் ஆதார வைத்தியசாலையில் முதல் வைத்திய அத்தியட்சகராகவும், சுகாதார வைத்திய அதிகாரியாகவும், திருக்கோவில், கோமாரி, நிந்தவூர், கொழும்பு தேசிய வைத்திய சாலை போன்ற இடங்களில் கடமையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் இயன்றவரை முதலீடு செய்யுங்கள்: லண்டனில் தமிழர்களுக்கு ஸ்டாலின் அழைப்பு

வெளிநாடு வாழ் தமிழர்கள் அனைவரும் ஆண்டுக்கு ஒரு முறை யாவது குடும்பத்துடன் தமிழகத்துக்கு வாருங்கள். உங்களால் இயன்றவரை அங்கு முதலீடு செய்யுங்கள் என்று லண்டனில் நடைபெற்ற தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழகத்தை 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் டொலர் பொருளா தாரம் கொண்ட மாநிலமாக உரு வாக்க அரசு தீவிர முயற்சிஎடுத்து வருகிறது.

இதற்காக, முதலீட்டாளர்கள் மாநாடு, முதலீடுகளை ஈர்ப்பதற்காக பல்வேறு சலுகைகள் அறிவிப்பு என பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. முதலீ டுகளை ஈர்க்க முதல்வர் ஸ்டாலின் வெளிநாட்டு பயணமும் மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில், தமிழ கத்துக்கு முதலீடுகளை ஈர்க்கும் விதமாக 'டிஎன் ரைசிங்' என்ற பெய ரில் முதல்வர் ஸ்டாலின் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண் டார். முதல்கட்டமாக ஜேர்மனிக்கு சென்ற அவர் பின்னர் இங்கிலாந்தில் பயணம் மேற்கொண்டார்.

முதல்வரின் இந்த பயணத்தின் போது, இந்துஜா குழுமம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்குதல், விரிவாக்கம் செய்தல் போன்றவற்றுக்கு தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ளன. அந்த வகையில், முதல் வர் ஸ்டாலினின் ஜேர்மனி, இங்கி லாந்து பயணத்தால் தமிழகம் பெற் றுள்ள மொத்த முதலீடு 15,516 கோடி. இந்திய ரூபா. இதன்மூலம் 17,613 பேருக்கு வேலைவாய்ப்பு உரு



வாக்கப்பட்டுள்ளதாக அரசு தெரி வித்துள்ளது.

இந்நிலையில், இங்கிலாந்து பய ணத்தின் நிறைவாக, லண்டனில் நடைபெற்ற 'மாபெரும் தமிழ்க்கனவு - இங்கிலாந்து வாழ் தமிழர்கள் சந்திப்பு' நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்டு, மாண வர்களின் கலை நிகழ்ச்சியை கண்டு ரசித்தார்.

இந்த நிகழ்வில் அவர் உரையாற்று கையில்,

"உலகின் அனைத்து பகுதிகளிலும் வசிக்கும் தமிழர்கள், மிக எளிய பின்புலங்களில் இருந்து, படித்து முன்னேறி, முக்கிய பொறுப்புகளுக்கு வந்துள்ளனர். அவர்கள் சுயமரியா தையுடன், மதிப்புமிக்க இடத்தில் இருப்பதை பார்த்து,திமுக தலைவராக, தமிழக முதல்வராக மிகவும் பெரு மைப்படுகிறேன். 'திராவிடத்தால் வாழ்கிறோம்' என்று பெருமிதத்துடன் சொல்லும் தமிழர்களை பார்க்கிறேன். அவர்கள் தமிழகத்தின் அறிவிக் கப்படாத தூதர்களாக இருக்கின்றனர். இதையெல்லாம் பார்க்கும்போது, தமிழுக்கு தீங்கு நினைக்கும் யாரு டைய எண்ணமும், ஒருபோதும் நிறைவேறாது என்ற எண்ணம் வலுப் பெறுகிறது.

அடுத்த தலைமுறை தமிழர்கள், நம்மைவிட அதிக உயரத்தில் இருக்க வேண்டும். ஆண்டுக்கு ஒரு முறையா வது அனைவரும் குடும்பத்துடன் தமிழகம் வாருங்கள். அங்கு இயன்ற முதலீடுகளை செய்யுங்கள். உங்கள் சகோதரனாக இந்த முத்துவேல் கரு ணாநிதி ஸ்டாலின் அங்கே இருப் பான். அந்த நம்பிக்கையோடு வாருங் கள். உலக கதவுகளை திறந்து, சக தமிழர்களை வளர்க்கும் வகையில் இங்குள்ள வேலைவாய்ப்புகள் பற்றி, தமிழகத்தில் இருக்கும் நமது இளை ஞர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

தமிழர்களின் வரலாறு, பண் பாட்டை வெளிக்காட்ட, கீழடியை தொடர்ந்து, பொருநை அருங்காட்சிய கம், கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகம் என்று அமைத்து வருகிறோம். குழந்தைகளுக்கு அதை சுற்றிக் காண்பித்து, நமது வரலாற்றை எடுத்துக் கூறவேண்டும். பழம் பெருமை மட்டுமின்றி, நாம் எவ்வளவு வலிகள், வேதனைகளை கடந்து தலை நிமிர்ந்துள்ளோம் என்பதையும் கூறவேண்டும்.

எப்போதும் தமிழர்களுக்குள் ஒற் றுமை நிலவவேண்டும். இந்த இனம் எப்போதும் முன்னேற்றப் பாதையில் மட்டுமே பயணிக்க வேண்டும். அதற் காகத்தான் தமிழகத்தில் ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகி றோம். வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு பிரச்சினை என்றால் ஓடோடி வந்து உதவுகிறோம்.

சாதி, மதம், ஏழை, பணக்காரன் போன்ற வேறுபாடுகள், நம்மை பிரிப்பதோடு, நமது இனத்தையே வளரவிடாது. தமிழ் என்ற வேரில் வளர்ந்திருக்கும் நாம், நமது அடையா ளத்தை ஒருபோதும் மறக்க கூடாது." என்று தெரிவித்துள்ளார்.

# 4 நகரங்களில் பாஜக பிரம்மாண்ட மாநாடு: பிரதமர் மோடியை பங்கேற்க வைக்க திட்டம்

சட்டப்பேரவை தேர்தலையொட்டி தமிழகத்தில் 4 இடங்களில் பிரம் மாண்ட மாநாடுகளை நடத்தி, அதில் பிரதமர் மோடியை பங்கேற்க வைக்க பா.ஜ.க. திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி நெல் லையில் பா.ஜ.க. பூத் கொமிட்டி மாநாடு நடைபெற்றது. இதில் அமித் ஷா பங் கேற்றார். அடுத்து, செப்ரெம்பர் 13 ஆம் திகதி மதுரையில் பூத்கொமிட்டி மாநாட்டை நடத்துவதற்கான ஏற் பாடுகளில் பா.ஜ.க. மூத்த தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். தொடர்ந்து, ஒக் டோபர் 26 ஆம் திகதி கோவை, நவம் பர் .23 ஆம் திகதி சேலம், டிசம்பர் 21 ஆம் திகதி தஞ்சாவூர், 2025 ஜனவரி 4 ஆம் திகதி திருவண்ணாமலை, ஜனவரி.24 இல் திருவள்ளூரில் பூத் கமிட்டி மாநாடுகள் நடைபெற உள் ளன. நிறைவாக சென்னையில் மாநாடு நடைபெறுகிறது. இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என தமிழக பா.ஜ.க. தெரிவித்திருந்தது.

நெல்லை மாநாட்டுக்கு அமித் ஷாவை அழைத்து வந்ததுபோல,



அடுத்தடுத்து நடைபெறும் பூத் கமிட்டி மாநாடுகளுக்கு தேசிய தலைவர்களை அழைத்து வர பா.ஜ.க. திட்டமிட்டுள்ளது.

இதில் கூட்டணி கட்சியான அ. தி.மு.கவும் பங்கேற்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. பா.ஜ.க. தேசிய தலைவர், குடியரசு துணை தலைவர் தேர்தல்கள் முடிவடைந்த பிறகு, இந்த மாநாடுகளை நடத்த பா.ஜ.க. திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து பா.ஜ.க. மூத்த தலை வர் ஒருவர் தெரிவிக்கையில்,

"நெல்லை பூத் கொமிட்டி மாநாடு அமித் ஷாவுக்கு திருப்தி அளிக்க வில்லை. அதேசமயம் பூத் கமிட்டி அமைக்கும் பணிகளிலும் தொய்வு ஏற்பட்டுள்ளது. மேலும், கூட்டணியில் ஏற்பட்டுள்ள சலசலப்புகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால், அடுத்த டுத்த பூத் கமிட்டி மாநாடு நடத்த வதிலும் பெரிய அளவிலான திட்டமி டல்கள் சரியாக நடைபெறவில்லை.

முதலில் கட்சியில் உள்ள குழப்பங் களை தீர்க்க நடவடிக்கை மேற் கொண்டு வருகிறோம். மேலும், சட் டப்பேரவை தேர்தலுக்காக பிரம் மாண்ட மாநாடுகளையும் நடத்த திட்டமிட்டுள்ளோம். இந்த மாநாடுக ளில், பிரதமர் மோடியை பங்கேற்க வைக்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது. இதற்கு முன்பாக, கூட்டணியில் ஏற் பட்டுள்ள சலசலப்புகள் களையப்பட்டு, மேலும், பல புதிய கட்சிகளை கூட்ட ணியில் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

பிரதமர் பங்கேற்கும் மாநாடுக ளுக்கு முன்பாக கூட்டணி இறுதி செய்யப்பட்டு, கூட்டணிக் கட்சி தலை வர்களை மாநாட்டு மேடையில் ஒன் றாக அமர வைக்க பா.ஜ.க. திட்டமிட் டுள்ளது. எனவே, மோடி, அமித் ஷா உள்ளிட்ட தலைவர்கள் அடிக்கடி தமிழகம் வருவதை இனிமேல் எதிர் பார்க்கலாம். இதனால் தொண்டர்க ளும் உற்சாகமாக பணியாற்றுவார் கள்." என்று தெரிவித்தார்.

# ரஷ்யாவின் தாக்குதல் இரக்கமற்றது: உக்ரைன் ஜனாதிபதி குற்றச்சாட்டு



கியேவின் பிரதான அரசாங்க கட்டடத்தின் மீது, ரஷ்யா நடத்திய தாக்குதல், இரக்கமற்ற தாக்குதல் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

அத்துடன், இந்தத் தாக்குதலுக்குப் பொருத்தமான பதிலடியை அளிக்கப் போவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

தலைநகரில் குடியிருப்பு கட்டடங்கள் மீது, ரஷ்யா நடத்திய தாக்குதல்களில், குழந்தை உட்பட 4 பேர் கொல்லப்பட்டனர் எனவும் 44 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

எனினும், இந்தத் தாக்குதல்களில் இராணுவம் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பை மட்டுமே தாம் குறிவைத்ததாக ரஷ்யா கூறியுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பிறகு, உக்ரைனுக்கு அமைதி காக்கும் துருப்புக்களை மேற்கத்தேய நாடுகள் அனுப்பும் யோசனைக்கு எதிராக, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரித்த நிலையில் இந்தத் தாக்குதல்கள் நடந்துள்ளன.

# ஜப்பான் பிரதமர் பதவி விலகினார்



ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபா, தனது பதவியில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளார் என அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

68 வயதான ஷிகெரு இஷிபா, கடந்த 2024ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜப்பானின் பிரதமராக பொறுப்பேற்றிருந்தார்.

கடந்த ஜூலை மாதம் ஜப்பான் நாடாளுமன்றத்தின் மேலவையில் அவருக்கு பின்னடைவு ஏற்பட்டது.

அவரது எல்.டி.பி. கட்சி (Liberal Democratic Party) மற்றும் அதன் கூட்டணி மேலவையில் பெருபான்மையை பெறாத நிலையில் தற்போது குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன .

கடந்த 2024ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மக்களவையில் அவரது எல்டிபி கூட்டணி பெரும்பான்மை பெறவில்லை.

இதனை தொடந்து கடந்த சில மாதங்களாக தேர்தல் தோல்விக்கு பொறுப்பேற்று பிரதமர் ஷிகெரு இஷிபா பதவி விலக வேண்டுமென அவரது கட்சியின் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

குறிப்பாக, அவரது கட்சியில் இருக்கும் வலதுசாரிகள், இந்த கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றனர்.

இருப்பினும் ஜப்பானுக்கு அமெரிக்கா விதித்துள்ள வரி, அதனால் ஜப்பான் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலை உள்ளிட்டவற்றை சுட்டிக்காட்டி பதவி விலகுவதற்கு ஷிகெரு இஷிபா முன்னதாக மறுத்திருந்தார்.

இந்நிலையில் ஜப்பான் நாடாளுமன்ற மேலவையில் 141 என இருந்த எல்.டி.பி. கூட்டணியின் எண்ணிக்கையை 122 ஆக குறைந்தது.

இந் நிலையில் பிரதமர் பொறுப்பில் இருந்து விலக ஷிகெரு இஷிபா முடிவு செய்துள்ளார் என தகவல் வெளியாகி உள்ளதுடன் கட்சியின் தலைமைப் பதவிக்கு முன்கூட்டியே தேர்தல் நடத்தலாமா என்பது தொடர்பாக இன்று லிபரல் டெமாக்ரடிக் கட்சி முடிவு செய்ய உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்தில் தனது 3 பிள்ளைகளுடன் தலைமறைவாக இருந்தவர் சுட்டுக்கொலை








நியூசிலாந்தில், சுமார் நான்கு ஆண்டுகளாக தனது மூன்று பிள்ளைகளுடன், தலைமறைவாக இருந்து வந்த ஒருவர், சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்று அதிகாலை மேற்கு வைகாடோவில் நடந்த ஆயுதமேந்திய கொள்ளை சம்பவத்திற்கு பதில் தாக்குதலை நடத்தியபோதே அவர் கொல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூடு நடந்த நேரத்தில், அவரது பிள்ளைகளில் ஒருவர் அவருடன் இருந்துள்ளார்.

எனினும் பிள்ளைக்கு எந்த ஆபத்தும் நேரவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏனைய இரண்டு பிள்ளைகளையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்தநிலையில் இந்த வழக்கு பல ஆண்டுகளாக நியூசிலாந்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருந்த பிலிப்ஸிற்கு நீதிமன்றத்தினால் ஏற்கனவே பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கனடா முரசு

திங்கட்கிழமை 08/09/2025

துப்புரவு பணியாளருக்கு கிட்டிய 46 மில்லியன் டொலர் அதிர்ஷ்டம்




03



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் காட்டுத் தீ; வீடுகளைவிட்டு வெளியேற உத்தரவு

கனடாவின் 800 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு வெளியேற்ற உத்தரவு மற்றும் எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடாவின் மத்திய பிரிட்டிஷ் கொலம்பியாவில் பாரிய காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், காட்டுத்தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் நைட் விஷன் ஹெலிகாப்டர் உட்பட நவீன உபகரணங்களை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில், ஆபத்தான நிலையினை கருத்திற்கொண்டு 800 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு வெளியேற்ற உத்தரவு மற்றும் எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

02









**பிரிட்டிஷ்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனடிப்படையில், கரிபூ பிராந்திய நிர்வாகம், அனாஹிம் ஏர, நிம்போ ஏரி, சார்லோட் ஏரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு இவ்வறிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த காட்டுத்தீ சுமார் 53 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியுள்ள நிலையில், தற்போது வரை அதனை அணைப்பது சவாலாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல வாரங்களாக நீடித்த சூடான வானிலை காரணமாக காடு மிகவும் உலர்ந்த நிலையில் இருப்பதே இதற்கான காரணம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தீயை அணைக்கவும் மற்றும் பீஃப் ட்ரெயில் கிரீக் காட்டுத்தீயை (100 சதுர கிலோமீட்டருக்கும் அதிக பரப்பளவு) கட்டுப்படுத்தவும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் பணியாற்றி வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# லாட்வியாவில் பணியில் இருந்த கனடிய படை அதிகாரி மரணம்

லாட்வியாவில் பணியில் இருந்த கனடிய ஆயுதப் படை உறுப்பினர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

வாரண்ட் ஆபிசர் ஜார்ஜ் ஹோல் என்ற படைவீரர் கடந்த செவ்வாய்க்கிழமை காணாமல் போனார் என அறிவிக்கப்பட்டிருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை அவர் மரணமடைந்தார் என தேசிய பாதுகாப்புத்துறை மற்றும் கனடிய ஆயுதப் படைகள் வெளியிட்ட அறிவிப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கில், கனடிய இராணுவ பொலிஸ், லாட்விய அதிகாரிகளுடன் இணைந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தற்போது அவரது மரணம், அங்குள்ள மற்ற படைவீரர்களின் பாதுகாப்புக்கு எந்தவித அச்சுறுத்தலாகவும் இல்லை எனவும் படைகள் தெரிவித்துள்ளன.

20 ஆண்டுகள் இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்த அவர், அனுபவம் மிக்க அதிகாரி என தெரிவிக்கப்படுகின்றது.

ஹோலின் மரணத்திற்கான சூழ்நிலைகள் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.






# துப்புரவு பணியாளருக்கு கிட்டிய 46 மில்லியன் டொலர் அதிர்ஷ்டம்

கனடாவின் கியுபெக் மாகாணத்தில் வசிக்கும் க்ளாட் புச்சர் என்ற துப்புரவுப் பணியாளர், ஓகஸ்ட் 27 அன்று நடைபெற்ற லொட்டோ சீட்டிலுப்பில் 46 மில்லியன் டொலர் ஜாக்பாட்டை வென்று அதிர்ஷ்டசாலியாகியுள்ளார்.

புச்சர், தனது வழக்கமான எண்களை பயன்படுத்தி ஒன்லைனில் டிக்கெட் வாங்கியிருந்தார்.

மின்னஞ்சல் மூலம் தான் வெற்றியாளர் என்பதை அறிந்தபோது, முதலில் 46,000 டொலர் என்று நினைத்தேன். ஆனால் பூஜயங்களை எண்ணியபோது அது 46,000,000 டொலர் என்று புரிந்தது எனக் கூறியுள்ளார்.

இந்த மாதத்தில் மூன்றாவது பெரிய வெற்றி இதுவெனவும், மாகாணம் முழுவதும் 2024ஆம் ஆண்டில் மட்டும் 1.8 பில்லியன் டொலர் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் லொட்டோ கியுபெக் நிறுவனத்தின் துணைத் தலைவர், தெரிவித்தார்.

புச்சர், விரைவில் ஓய்வு பெற்று தனது மனைவியுடன் 1980க ளில் வாழ்ந்த சுவிட்சர்லாந்துக்கு திரும்பிச் செல்லவும், குடும்பத்தினருக்காக உதவிகள் செய்யவும் விருப்பம் தெரிவித்துள்ளார்.

# கனடா – அமெரிக்க எல்லையில் மனிதக் கடத்தல் அதிகரித்துள்ளது

## அமெரிக்க சட்ட மா அதிபர் தகவல்

கனடா வழியாக அமெரிக்க எல்லையில் மனிதக் கடத்தல் அதிகரித்து வருவதாக அமெரிக்க சட்ட மா அதிபர் பாம் பாண்டி, தெரிவித்துள்ளார்.

இது, கனடா நீதியமைச்சர் சீன் ஃப்ரேசர், பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கேரி ஆனந்தசங்கரி, மற்றும் "ஃபெண்டனில் சார்ஜ்" கெவின் ப்ரோசோ ஆகியோருடன் வொஷிங்டனில் நடைபெற்ற சந்திப்புக்கு பின்னர் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த சந்திப்பில் எல்லை பாதுகாப்பு உள்ளிட்ட பல முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதற்கிடையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஓகஸ்டில் கனடாவுக்கு விதித்த சுங்க வரிகளை 35 வீதமாக உயர்த்தியிருந்தார்.

ஆனால், கனடா - அமெரிக்கா- மெக்ஸிகோ வர்த்தக உடன்படிக்கையின் கீழ் மூல விதிகளுக்கு ஏற்ப உள்ள பொருள்களுக்கு இந்த சுங்க வரி பொருந்தாது.

கனடா எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்த பல முதலீடுகளைச் செய்துள்ளதாகவும், பிரதமர் மார்க் கார்னி ஜூன் மாதத்தில் விரிவான எல்லை சட்டத்தை அறிமுகப்படுத்தியதாகவும் கனடிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

